# தேவனை அறிவது மெய்யாகவே சிறந்தது




## 1.8 யெகோவா ஷம்மா

**வேத வசனம்:** **சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்.**
*சங்கீதம். 46:11*



**அறிக்கை:** **தேவன் எப்போதும் நமக்கு அடைக்கலமாகவும் உதவியாகவும் இருப்பார்**

**சத்தியம்:** கர்த்தர் தம்மை வெளிப்படுத்தி யிருக்கிறார். அவருடைய நாமத்தை அறிந்தவர்கள் அவர் மேல் நம்பிக்கையை வைக்கலாம். அவரைத் தேடுகிறவர்களை அவர் கைவிடுவதில்லை.

## வேத பகுதி: ஆதியாகமம் 28:10-17

**பாடம்**

**1. தேவனுடைய ஆசீர்வாதங்களை விரும்பும் மனிதன்:** பழைய ஏற்பாட்டில் வாழ்ந்த யாக்கோபு மிக சிறிய வயதிலேயே தேவனுடைய ஆசீர்வாதங்களை விரும்பினான். அவன் பெரியவனானபோதோ தன் சகோதரனாகிய ஏசாவை திட்டமிட்டு ஏமாற்றி அவனுடைய சேஷ்டபுத்திரபாகத்தை பறித்துக்கொண்டான். அந்த அளவு அவன் தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கும் அபிஷேகத்திற்கும் மதிப்பளித்தான்.

**2. தேவன் தம்முடன் இருப்பதை யாக்கோபு உணர்ந்தான்:** யாக்கோபு தன் அண்ணன் ஏசாவை ஏமாற்றி ஆசீர்வாதங்களைப் பறித்துக்கொண்டபடியால், பழிவாங்கத்துடிக்கும் அண்ணனுக்குப் பயந்து ஆரான் என்ற இடத்துக்கு தப்பித்து ஓடவேண்டியதாயிற்று. அவ்விதம் ஓடும் வழியில் பெத்தேல் என்ற இடத்தில் ஒரு தெய்வீக கனவின் வழியே தேவன் தம்முடைய பிரசன்னத்தை யாக்கோபுக்குத் தெரிவித்தார். அப்போது தேவன், “நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர். நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன். உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும். நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய். உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பிவரப்பண்ணுவேன். நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார்”. இவ்விதம் தேவன் தம்முடைய பிரசன்னத்தையும் பாதுகாப்பையும் எப்போதும் தருவேன் என்றும், தம்முடைய வாக்குத்தத்தம் நிச்சயம் அவனிடத்தில் நிறைவேறும் என்றும் அவனுக்கு வாக்களித்தார். (ஆதி. 28:10-17)

**3. சமாதானம், பாதுகாப்பு, ஆசீர்வாதங்கள் ஆகியவற்றை அனுபவிப்பது:** தேவனுடைய பிரசன்னத்தைப் பெற்றுக்கொண்ட யாக்கோபு அதன் விளைவாக அவருடைய சமாதானத்தையும் பாதுகாப்பையும் அனுபவித்தான். உன் சந்ததி பூமியின் தூளைப்போல இருக்கும் என்றும், உனக்குள் பூமியில் உள்ள அனைவரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்ற தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக அவன் புதுப்பிக்கப்பட்டு நிறைவான ஆசீர்வாதங்களின் மனிதனாக வலம் வந்தான். விரும்புகிற அனைவருக்கும் யாக்கோபைப்போல ஆசீர்வாதத்திற்காக ஏங்கும் மனதைத் தேவன் தருகிறார். அவர்கள் தேவனுடைய பிரசன்னத்தையும் தேவனே உண்மையான அடைக்கலம் மற்றும் கோட்டை என்பதையும் அனுபவிப்பார்கள்.

**முடிவுரை:** யாக்கோபின் வாழ்விலிருந்து நாம் கற்றுக்கொள்ளுவது என்னவென்றால், தேவனுடைய பிரசன்னத்திற்காக ஏங்குகிறவர்களிடத்திலும், அதனைத் தேடுகிறவர்களிடத்திலும் தேவன் தங்கியிருப்பார். தேவனுடைய பிரசன்னம் அனைத்து பயங்களையும் நம்மை விட்டு விரட்டிவிடும்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.